www.ecourtsindia.com

# DEPOSITION OF WITNESS

*(Chapter XXIII code of Criminal Procedure)*

In the Court of Principal Special Judge for CBI Cases
VIII Additional City Civil Court, Chennai – 104.

Calendar Case } **C.C.No.6/2019**
Prosecution Witness **PW: 15 (LW- 3)**

| | | | |
|---|---|---|---|
| Name | : Smt. G. Jayarani | Caste | : |
| Father's Name | : Mr. R. Gopal | Calling | : VAO |
| Village | : Krishnapuram and Rajagopalapuram | Religion | : Hindu |
| Taluk | : VAO Office, Krishnapuram, Palayamkottai Taluk | | |
| Age | : 48 years | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on this the 12th day of April, 2023.

---

**எதிரி ஆஜராகவில்லை, கு.வி.மு.ச.பிரிவு 317 ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் அவரது வழக்கறிஞர் ஆஜராகினார்.**

**முதல் விசாரணை -**

நான் தற்சமயம் பாளையங்கோட்டை வட்டம், கிருஷ்ணாபுரம் மற்றும் இராஜகோபாலபுரம் ஆகிய கிராமங்களில் 13.08.2021 முதல் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 05.08.2015 முதல் 2016 வரை பாளையங்கோட்டை வட்டம், குலவணிகர்புரம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். அப்போது சிபிஐ அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க குலவணிகர்புரம் கிராமம், புஞ்சை புல எண் 460B/9A மற்றும் 460B/9B க்கான கிராம

Taken down before me, read over to the witness and admitted by him to be correct and signed before me.

K DHANASEKARAN — Digitally signed by K DHANASEKARAN Date: 2023.04.12 17:21:47 +0530

Principal Special Judge for CBI cases, Chennai

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCH020024272019/truecopy/order-15.pdf

www.ecourtsindia.com



கணக்குகள் நகல், FMB நகல் மற்றும் பட்டா நகல், அடங்கல் நகல்களை உண்மை நகல் என்று ஒப்பம் இட்டு கொடுத்தேன். மேற்படி நகல்கள் தற்சமயம் **அ.சா.ஆ.48 வரிசையாக (ஒன்பது தாள்கள்)** குறியீடு செய்யப்படுகிறது. அ.சா.ஆ.48 ன் படி புஞ்சை புல எண் 460B/9A பட்டா எண் 1420 ன்படி 1. திரு. இராமையா பிள்ளை மனைவி திருமதி அமிர்தம்மாள், 2. திரு. ஞானப்பிரகாசம் மகன் திரு. ப்ரான்சிஸ், 3. திரு. முருகேசன் மனைவி திருமதி திரிசலாதேவி மற்றும் 4. திரு. சண்முகம் மகன் ரவிச்செல்வம் ஆகிய நான்கு பேர்களின் பெயர்களில் இருந்தது. அ.சா.ஆ.48 ன்படி புஞ்சை புல எண் 460B/9B பட்டா எண் 751 ன்படி 1. திரு. சுடலைமுத்து கோனார், 2. திரு. ஆறுமுகம் கோனார், 3. இந்திரா, 4. திரு. செல்லையா மகன் திரு. பலவேசம், 5. திரு. K.S. மணி, 6. திரு. கருப்பசாமி ஆகியவர்கள் பெயரில் இருந்தது. மேற்படி புல எண்களுக்குரிய பசலி எண்கள் 1420 முதல் 1423 தரிசு நிலமாகும். மேலும் புல எண்களுக்குரிய பசலி எண்கள் 1424 முதல் 1425 ஆகிய நிலங்கள் வீட்டு மனைகள்

Taken down before me, read over to the witness and admitted by him to be correct and signed before me.
K DHANASEKARAN Digitally signed by K DHANASEKARAN Date: 2023.04.12 17:21:56 +0530
Principal Special Judge for CBI cases, Chennai

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCH020024272019/truecopy/order-15.pdf

ஆகும். என்னிடம் காட்டப்படும் கிரைய ஆவணம் தேதி 23.07.2007 ஆவண எண் 5340/2007 ன்படி திரு. இராஜூ மனைவி திருமதி வடிவம்மாள் என்பவரிடமிருந்து திரு. பரமசிவன் மனைவி திருமதி. செல்வராணி என்பவர் ரூ.1,50,000/-க்கு கிரையம் பெற்றுள்ளார். என்னை சிபிஐ அதிகாரிகள் விசாரிக்கும் வரை இந்த கிரைய ஆவணத்தின்படி திருமதி. செல்வராணி பெயரில் பட்டா மாறுதல் செய்யப்படவில்லை. எங்கள் ஆவணங்களின்படி பசலி எண் 1420 ல் பயிர் செய்ததற்கான பதிவு எதுவும் இல்லை. இது சம்பந்தமாக சிபிஐ அதிகாரிகள் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லையென்று தெரிவித்துவிட்டார்.**

**மறு விசாரணை இல்லை.**

**Sd./**
Signature of witness

Taken down before me, read over to the witness and admitted by him to be correct and signed before me.

K DHANASEKARAN
Digitally signed by K DHANASEKARAN
Date: 2023.04.12 17:22:04 +0530

Principal Special Judge for CBI cases, Chennai

www.ecourtsindia.com

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCH020024272019/truecopy/order-15.pdf